அம்பத்துர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 106/2013

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 03–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| நீ.சா.1 | 03.07.2026 |
| பெயர் கண்ணன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>வாதிதரப்பு குறுக்கு விசாரணை</u>:–

1. சர்வே எண் 16/1 ல் மொத்த விஸ்திரணம் எவ்வளவு என்றால் 36 ஏர்ஸ் ஆகும். தற்போது பல உட்பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கணினி பட்டா வருவாய் துறை ஆவணமா என்றால் ஆமாம். அதில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 16/22. மொத்தபரப்பு 03.40 ஏர்ஸ். மேற்கூறிய சர்வே எண் 16/22 03.40 ஏர்ஸ் என்பது மேற்கூறிய மொத்த 36 ஏர்ஸ் ல் ஒருபகுதி என்றால் சரிதான். ( **சர்வே எண் 16/22 கணினி பட்டா சா.சா.ஆ 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**). என்னிடம் உள்ள அடங்கல் பதிவேட்டின் படி சர்வே எண் 16/22 யார் பெயரில் உள்ளது என்றால் 03.40 ஏர்ஸ் மணிமாரன் என்பவர் பெயரில் உள்ளது. ( **சர்வே எண் 16/22 அ பதிவேடு உண்மை நகல் சா.சா.ஆ.7 ஆக**

குறியீடு செய்யப்படுகிறது)

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.